செ.வெ. எண்: 260 நாள்: 6.4.2008

## செய்தி வெளியீடு – 6.4.2008

## தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் விடுக்கும் உகாதித் திருநாள் வாழ்த்துச் செய்தி

தெலுங்கு மொழி பேசும் மக்களின் புத்தாண்டு நாளாகிய "உகாதித் திருநாள்" இன்று (7.4.2008) மிகுந்த உற்சாகத்துடன் கொண்டாடப்படுகிறது. தமிழகத்தின் பண்பாட்டுணர்வோடு ஒன்றிக் கலந்து பல ஆண்டுகளாகத் தமிழக மக்களோடு இணைந்து வாழும் தெலுங்கு சமுதாய மக்கள் அனைவரது வாழ்வும், தொழிலும் சிறந்து வளம் பெருகிட என் இதயம் கனிந்த உகாதித் திருநாள் நல்வாழ்த்துகள் உரித்தாகுக.

திராவிட மொழிக் குடும்பத்தின் முதன்மை மொழியாகிய தமிழ் மொழி பேசும் மக்கள் "யாதும் ஊரே யாவரும் கேளிர்" எனக் கணியன் பூங்குன்றனார் புகன்ற நெறியில் அன்று முதல் இன்று வரை மற்றவர்களையும் தம்மைப்போல் மதிக்கும் யதார்த்த உணர்வுடன்; பழகும் அனைவரிடமும் பரிந்து நல்லுறவு பேணிடும் பண்பாட்டினை இயற்கையாகவே கொண்டு வாழ்கின்றனர். இதற்குச் சான்றாக இன்றைய நிலையில் சென்னை மாநகரையே எடுத்துக் கொள்ளலாம். இந்தியத் திருநாட்டின் – ஏறத்தாழ அனைத்து மாநிலங்களிலிருந்தும், தொழில், வர்த்தகம் முதலிய பல்வேறு காரணங்களால் பலர் சென்னையில் குடியேறிப் பல்லாண்டு காலமாகச் சொத்து சுகங்களுடன் வாழ்ந்து வருகின்றனர்; பல்வேறு நோக்கங்களுடன் சிலர் அவ்வப்போது இங்கு வந்தும் செல்கின்றனர். அவர்களில் எவரிடமும் தமிழ் மக்கள் இதுவரை எந்தவித பேதமும் காட்டியதில்லை; மாறாக அவர்கள் அனைவரிடமும் அன்பு செலுத்தி, ஒத்துழைப்புகள் நல்கி, உதவிகள் புரிந்து வந்துள்ளனர். இதனை நாடும் நல்லோரும் நன்கறிவர். இது, தமிழ் மக்களின் பரந்த மனப்பான்மையை, பெருந்தன்மையை உலகுக்கு உரைத்திடும் தனிப் பண்பாகும்.

மனித நேயத்தின் அடிப்படையில் இந்த நல்லுறவு பேணும் பாங்கும், மற்றவர்களை மதிக்கும் நல்லிணக்க உணர்வுகளும் தமிழகத்தில் மட்டுமல்லாமல் மற்ற மாநிலங்களிலும் தழைத்திட வேண்டுமென்பதைத் தமிழகம் எதிர்பார்க்கிறது. இந்தச் சிந்தனையோடு உகாதித் திருநாளைக் கொண்டாடும் தெலுங்கு சமுதாய மக்கள் அனைவருக்கும் மீண்டும் எனது நல்வாழ்த்துகளைத் தெரிவித்து மகிழ்கிறேன்.

***

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9.